# நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 41**
பெப்ருவரி 2012

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**நீதிமொழிகள்**

2001 தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே (20:19)
2002 தன்னடக்கத் தோடிரு (25:28)
2003 உன் மகனைச் சிட்சை செய்; அவன் உனக்கு ஆறுதல் செய்வான், உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான் (29:17)
2004 வேதத்தைக் காத்துக்கொள்(keep God's law) (29:18)
2005 மாயையைத் (lying) தூரப்படுத்து (30:8)
2006 திராட்சரசம், மதுபானம் குடியாதே (31:4)
2007 நல்லொழுக்கமுள்ள ஸ்திரீயாயிருந்து மானத்தைக் காத்துக்கொள் (11:16)
2008 குணசாலியான ஸ்திரீயாயிரு; உன் புருஷனுக்கு கிரீடமாயிருப்பாய் (12:4)
2009 உன் வீட்டைக் கட்டும் புத்தியுள்ள ஸ்திரீயாயிரு (14:1)
2010 புத்தியுள்ள மனைவியாயிரு (19:14)
2011 குணசாலியான ஸ்திரீயாயிரு நீ முத்துக்களைப் பார்க்கிலும் விலையுயர்ந்திருப்பாய் (31:10)
2012 உன் புருஷனுக்கு தீமையையல்ல; நன்மையையே செய் (31:12)
2013 மனைவியே! உன் வேலையனைத்தையும் உற்சாத்தோடே செய் (31:13) சுறுசுறுப்பாகச் செய் (31:17)
2014 மனைவியே! வைகறையில் துயிலெழு (31:15)
2015 மனைவியே! சிறுமையானவர்களுக்கு உன் கையைத் திற; ஏழைகளுக்கு உன் கரங்களை நீட்டு (31:20)
2016 மனைவியே! பலத்தையும் கனத்தையும் (மரியாதையையும்) அணிகலனாகக் கொள் (31:25)
2017 மனைவியே! நீ பேசும்போது ஞானத்தோடு பேசு (31:26)
2018 மனைவியே! அன்போடு அறிவுரை கூறு (31:26)
2019 மனைவியே! உன் வீட்டுக்காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இரு (31:27)
2020 மனைவியே! உணவுக்காகப் பிறர் கையை எதிர்பார்த்துச் சோம்பியிராதே (31:27)
2021 மனைவியே! உன் பிள்ளைகள் உன்னைப் பாக்கியவதி (நற்பேறு பெற்றவள்) என்பார்களாக (31:28)
2022 கணவனே! உன் மனைவியைப் புகழ் (31:29)
2023 மனைவியே! கர்த்தருக்குப் பயப்படு; புகழப்படுவாய் (31:30)
2024 மனைவியே! உன் நற்கிரியைகளால் பாராட்டு பெறுவாய் (31:31)

**பிரசங்கி**

2025 புசித்துக் குடித்து, உன் சகல பிரயாசத்தின் பலனையும் அநுபவி (2:24, 5:18); அது தேவனுடைய அநுக்கிரகம் (3:13)
2026 தேவனுடைய பார்வைக்கு நல்லவனாயிரு (2:26)
2027 மகிழ்ச்சியாயிரு (3:12, 8:15)
2028 உயிரோடிருக்கையில் நன்மை செய் (3:12)



நாம் நன்றி செலுத்துவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அப்படியென்றால் நன்றியுள்ள இதயம் தேவனை மகிழப்பண்ணுகிறது. நாம் நன்றி சொல்வதில்லையென்றால் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக நடக்கிறோம் அல்லது தேவனை விட்டு விலகிச் செல்லுகிறோம் என்பதுதானே பொருள்!

"கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் **பாடுவேன்**" (சங்கீதம் 13:6)

"கர்த்தருக்கு **ஸ்தோத்திரம்**; அவர் என் விண்ணப்பங்களின்
சத்தத்தைக் கேட்டார்" (சங்கீதம் 28:6)

"நன்றி உள்ள நிறைவுடன், நன்றி பரிசுத்தர்க்கே,
நன்றி தேவகுமாரன் இயேசுவைத் தந்தார் நமக்காய்;
பெலவீனன் பெலவான் என்று சொல்வான், தரித்திரன் செழித்திடுவான்,
தேவனின் செயல் இதுவே – நமக்காய் நன்றி"

ரெய்னார்ட் போங்கே அடிக்கடி இப்படிக் குறிப்பிடுவார் : நற்செய்தி ஒரே நற்செய்திதான், அறிவிக்கும் மனிதர்களும் அறிவிக்கும் முறைகளுமே வெவ்வேறு. அதை இப்படியும் கூறலாம் : நற்செய்தியானது தூய ஆவியானவர் அருளும் திருவசனங்களின் இயல்பான தொகுப்பு. எனக்குப் பிரியமானவர்களே, ஒத்தவாக்கியப் புத்தகத்தைப் கையிலெடுங்கள். நன்றி தொடர்பான வசனங்களைப் பாருங்கள். அவற்றை ஒங்களுடைய குறிப்பேட்டில் எழுதிக் கொள்ளுங்கள். தொடர்ந்து ஒவ்வொரு வசனமாக தியானியுங்கள். தியானிக்க, தியானிக்க இன்னும் நன்றி சொல்லும், பெரிய (Huge) நன்றி சொல்வதற்கான வாய்பை தேவன் அருளுவார். மனிதன் மீண்டும் ஏதேன் தோட்ட ஆசீர்வாதத்தைப் (The Blessing) பெற்றுக்கொள்ள வேண்டும்; அதைத் தர தேவன் காத்திருக்கிறார். ஆமென்! அல்லேலூயா!!

**நமது வெளியீடான என் முழு உள்ளமே கர்த்தரை ஸ்தோத்தரி என்ற புத்தகத்தில் 1400 ஸ்தோத்திர குறிப்புகள் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் முடிய தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன அதை வாங்கிப் பயன்பெறுங்கள். விலை ரூ. 25/- மற்றவர்களுக்கும் பரிசாக கொடுக்க சிறந்த நூல்.**

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

# "நன்றியுள்ள இதயம்"

Dr. P. செல்வராஜ், கோவை

மனிதன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ இதயத்தைப் பார்க்கிறார்; நன்றியுள்ள இதயத்தைப் பார்த்து பூரிப்படைகிறார்.

"எல்ரோயீ, எல்ரோயீ,
என்னைக் கண்டீரே, நன்றி ஐயா (2)...."

வகுப்பறையில் 'Thank you, Sir', 'Thank you, Madam' எலும் குரலொலியை அவ்வப்போது கேட்கிறோம். அலுவலகத்தில் 'Thank you, Sir' எனும் சொற்றொடரை அவ்வப்போது கேட்கிறோம். நல்ல பழக்கம்தான். ஆனால் தேவனுக்கு நன்றி சொல்லுகிறோமா?

"அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து **எளிப்படுத்தி**, உமது நீதியை கெம்பீரித்துப் பாடுவார்கள்" (சங்கீதம் 145:7)

ஆம், தேவனுடைய தயவை, மிகுந்த தயவை, நினைத்து நாம் நன்றி கூற வேண்டும், நன்றிப் பாடல் பாட வேண்டும். ஆமென்! அல்லேலூயா!!

ஒரு சிறந்த Diary-யானது "நன்றி" எனும் இனிய, நலமான சொல்லால் நிரப்பப்பட்டிருக்கும். குறைசொல்லுதலால் அல்லவே, அல்ல! அப்படி ஒரு நாட்குறிப்பேடு வேண்டவே வேண்டாம்!

"ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் **கணக்கொப்புவிப்பான்"** (ரோமர் 14:12)

அந்தக் கணக்கில் நன்றி 'சொன்னதும்' இடம்பெற்றிருக்கும் அல்லவா?

1தெசலோனிக்கேயர் 5:15-18 ஆகிய வேதபகுதியை தியானித்துப் பாருங்கள் :

".... உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய **நாடுங்கள்**" (வசனம் 15)

நாம் நன்மை செய்ய, எப்பொழுதும் நன்மை செய்ய, யாவருக்குள்ளும் நன்மை செய்ய வேண்டுமானால் நமக்கு நன்றியுள்ள இதயம் கட்டாயம் தேவை. குறைசொல்லும் இதயமானது நம்மை நன்மை செய்யும் பாதையில் செல்ல, முன்னேற விடாது, விடவே விடாது!

"எப்பொழுதும் **சந்தோஷமாயிருங்கள்**" (வசனம் 16)

அது எப்படி எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க முடியும்? நன்றியுள்ள இதயம் இருக்குமானால் அப்படியிருக்க முடியும். திருவசனம் என்ன கூறுகிறது? மனிதன் எவ்வண்ணம் சிந்திக்கிறானோ அவ்வண்ணமே இருக்கிறான் (As a man thinks, so is He)

"இடைவிடாமல் **ஜெபம் பண்ணுங்கள்**" (வசனம் 17)

இதற்கும் நன்றியுள்ள இதயத்திற்கும் என்ன சம்மந்தம்? ஜெபத்தில் நன்றி சொல்லுதலும் ஒருபகுதி, அதுவும் முக்கியமான பகுதி, என்பதை மறந்துவிட்டீர்களா?

"நன்றியால் பாடிடுவோம் (2)
நல்லவர் இயேசு நல்கிய எல்லா,
நன்மைகளை நினைத்தே..."

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய **சித்தமாயிருக்கிறது**" (வசனம் 18)



2029 உன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிரு (3:22)
2030 வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், மன அமைதியோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம் (4:6)
2031 ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது (4:9,12)
2031 கிழவனாயினும் ஆலோசனையைக் கேள் (4:13)
2033 நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள் (5:1)
2034 தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும் மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக (5:2)
2035 நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே (5:4)
2036 நீ நேர்ந்து கொண்டதைச் செய், நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாமலிருப்பதே நலம் (5:4,5)
2037 உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே (5:6)
2038 தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொள்ள விடாதே (5:6)
2039 நீ தேவனுக்குப் பயந்திரு (5:7); நீ நன்றாயிருப்பாய் (8:12)
2040 தேவனுக்குப் பயந்து (12:13), அவர் கற்பனைகளைக் கைக்கொள் (8:5, 12:13)
2041 பணப்பிரியனாயிராதே; திருப்தியடையாய் (5:10)
2042 பரிதானம் வாங்காதே; அது இருதயத்தைக் கெடுக்கும் (7:7)
2043 நீ உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி (9:7)
2044 உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக (9:8)
2045 நீ நேசிக்கிய மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி (9:9)
2046 செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் (9:10)
2047 உன் மிகுந்த சோம்பலினால் மேல்மச்சு பழுதாக விடாதே (10:18)
2048 உன் கைகளின் நெகிழ்வினால் வீடு ஒழுக்காக விடாதே (10:18)
2049 காற்றைக் கவனித்தால் நீ விதைக்கமாட்டாய்; மேகங்களை நோக்கினால் அறுக்கமாட்டாய் (11:4)
2050 காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே (11:6)

நன்றி கூறுகிறோம்...

கடந்த ஆண்டு 500 வேதாகமத்திற்கு ரூ. 100 வீதம் தாங்க கேட்டிருந்தோம். 570 வேதாகமங்களை வாங்கி கொடுத்தீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இந்த ஆண்டு ஒரு குடும்பத்தினர் கேட்கும் முன்னரே 100 வேதாகமங்களுக்கு காணிக்கை அனுப்பிவிட்டார்கள். இன்னமும் நமது தேவை 650 வேதாகமங்கள் தாங்க முன் வாருங்கள்.

வாலிபர் பக்கம்

# நீ மாதிரியாயிரு

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என வேதபுத்தகமாகிய திருமறை வழி வகுக்கிறது. சிறுவர்களோ, இளைஞர்களோ, முதிர்வயதுடையோரோ எல்லா வயது பிரிவினரும் ஒழுக்கத்தோடே நல்வழி நடக்க வேதம் ஆலோசனை சொல்லுகிறது. வாழ்க்கையில் விழுந்துபோன இளைஞர்களை எச்சரிப்பாகவும் தேவனுக்காய் எழுந்துநின்று சவால்விட்டு சாதனைபுரிந்த வாலிபர்களை மாதிரிகளாகவும் வேதம் கற்றுக்கொடுக்கிறது.

புதிய ஏற்பாட்டில் தீமோத்தேயு என்னும் ஒரு வாலிபனைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இவர் சின்ன ஆசியாவில் பிறந்தவர். சிறுவயதாயிருக்கையில் தகப்பனை இழந்து போனதால் தாயும் பாட்டியும் இவரை யூத மார்க்க விதிப்படி வளர்த்தார்கள் என சரித்திரம் கூறுகிறது. பவுலின் சுவிசேஷத்தால் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவர் நற்சாட்சி பெற்றவருமாயிருந்தார். அப்போஸ்தலனாகிய பரி. பவுலோடு இணைந்து சுவிசேஷ ஊழியமும் செய்தார். பவுல் அப்போஸ்தலர் சிறையில் இருக்கும்போது வாலிபனான தீமோத்தேயு எபேசுவில் தங்கி ஊழியம் செய்தார். இந்நிலையில் இவருக்கு பவுல் கொடுத்த ஆலோசனைகள் 1தீமோத்தேயு, 2தீமோத்தேயு என இரண்டு நிருபங்களாக வேதத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இளைஞனான தீமோத்தேயுவைக் குறித்தும் அவருடைய இளமையை குறித்தும் ஒருவரும் அவரை அசட்டை பண்ணாதபடிக்கு எவைகளில் மாதிரியாய் இருக்க வேண்டும் என 1தீமோத்தேயு 4:12ல் பட்டியல் இடுகிறார். அவைகள் 1. வார்த்தையிலும் 2. நடக்கையிலும் 3. அன்பிலும் 4. ஆவியிலும் 5. விசுவாசத்திலும் 6. கற்பிலும் என்பதே. விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருக்க ஆலோசனை கூறுகிறார். (1தீமோ. 4:12)

### வார்த்தையில் மாதிரி

நீங்கள் உங்கள் வார்த்தையில் மாதிரியாயிருக்க வேதம் உங்களுக்கு வழிகாட்டுகிறது. சிந்தின பொருட்களை சேகரித்து விடலாம் ஆனால் சிந்தின வார்த்தைகளை மறுபடியும் சேகரிக்க முடியாது. எனவே பேசுகிற வார்த்தைகளை சிந்தித்து பேச வேண்டும். நல்வார்த்தை இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் (நீதி. 12:25) மனம் பதறி ஒரு வார்த்தையும் பேசக்கூடாது. உன் வார்த்தை சுருக்கமாய் இருப்பதாக. (பிர. 5:2) வார்த்தையின் மிகுதியால் மூடத்தனம் விளங்கும். சொற்களின் மிகுதியால் பாவம் இல்லாமற்போகாது. எனவே கடினமான, கசப்பான வார்த்தைகளை களைந்து இனிய எளிய வார்த்தைகளையே மற்றவர்களிடம் பேச வேண்டும்.

பள்ளியிலோ, கல்லூரியிலோ, நண்பர் வட்டத்திலோ, எதிர்பாலரோடு பேசும்பொழுதோ உன் வாயின் வார்த்தைகள் எவரையும் குறைகூறுவதாகவோ, பழிப்பதாகவோ, மனவேதனை அடையச் செய்வதாகவோ இருக்க வேண்டாம். இயேசுவானவர் தாமே கூறியிருக்கிறார் : மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (மத். 12:36) பிலாத்துவின் முன்பாக, பிரதான ஆசாரியரும், மூப்பரும் இயேசுவை குற்றம்சாட்டும் பொழுது இயேசுவோ ஒரு வார்த்தையும் மாறுத்தரம் சொல்லவில்லை என்று வேதம் கூறுகிறது.



சந்திக்கும் நபர்கள் எழும்ப

- VBS நடைபெறும் கிராமங்களில் திறந்த வாசல் உண்டாக எதிர்ப்புகள் மாற.. எதிர்ப்பாளர்கள் சந்திக்கப்பட...
- VBSல் கலந்து கொள்ளும்பிள்ளைகளின் குடும்பங்களில் தேவன் ஆசீர்வாதத்தை கட்டளையிடப்பட

*மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள*

**ஆத்தும ஆதாயகர் இளைஞர் இயக்கம் (Young Soul Winners Mission)**

ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101. மொபைல் 9443289026

## ஜெபியரங்கள்

பிப்ரவரி

| | | | |
|---|---|---|---|
| 1 | முழுஇரவு ஜெபம் | தேவனுடைய கூடாரம், ஏழாயிரம்பண்ணை | |
| 2 | அற்புதத்தின் மாலை | பாளையங்கோட்டை | மாலை 6.30 - 8.30 |
| 4 | அற்புத உபவாச ஜெபம் | ஸ்ரீவைகுண்டம் | காலை 10 - 2 |
| 4 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சாத்தூர் | மாலை 4 - 6 |
| 4 | ஸ்தோத்திர கூடுகை | ரெகோபோத் ஜெபகூடாரம், திசையன்விளை | காலை 10 - 2 |
| 5 | குடும்ப மனமகிழ்ச்சி முகாம் | கொளக்கட்டாகுறிச்சி | காலை 10 - 4 |
| 6 | அற்புதத்தின் மாலை | ஆலங்குளம் | மாலை 7 - 9 |
| 8 | முழுஇரவு ஜெபம் | தலைமை அலுவலகம், தூத்துக்குடி | |
| 10,11 | நற்செய்திக் கூட்டங்கள் | CSI ஆலயம், மகாராஜாநகர், நெல்லை | மாலை 6.30 |
| 11 | அற்புத உபவாச ஜெபம் | மைப்பாறை | காலை 10 -2 |
| 11 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | விருதுநகர் | மாலை 4 - 6 |
| 11 | உபவாச ஜெபம் | CSI, Web ஆலயம், மதுரை | |
| 12 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | தூத்துக்குடி | மாலை 4 - 6 |
| 12 | ஞாயிறு ஆராதனை | ஜெபவீடு, பெருந்துறை | காலை 10 - 1 |
| 19 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | ஏழாயிரம் பண்ணை | மாலை 4 -6 |
| 14 | அற்புதத்தின் மாலை | திருவேங்கடம் | மாலை 6 - 8 |
| 14 | அற்புத உபவாச ஜெபம் | பிரமுத்து தேவர்விளை, தூ-டி. | காலை 11 - 2 |
| 16 | அற்புதத்தின் மாலை | புதுக்கோட்டை | மாலை 7.15 - 9 |
| 18 | அற்புத உபவாச ஜெப நாள் | மஞ்சம்பட்டி | காலை 10 - 2 |
| 18 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | திருவேங்கடம் | மாலை 4-6 |
| 20 | அற்புத உபவாச ஜெபம் | மாதாநகர், தூத்துக்குடி | காலை 11 - 2 |
| 21 | அற்புதத்தின் மாலை | அம்பாசமுத்திரம் | மாலை 5 -7 |
| 29 | திறப்பின் வாயில் ஜெபம் | ஏழாயிரம்பண்ணை | |
| 25 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | ஸ்ரீவைகுண்டம் | மாலை 4 - 6 |
| 25 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சிவகாசி | மாலை 4 - 6 |
| 25, 26 | நற்செய்தி கூட்டங்கள் | வேலூர் | மாலை 6.30 |
| 27 | 11வது பிரதிஷ்டை ஆராதனை | புல்லலக்கோட்டை | காலை6 |
| 26 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | மஞ்சம்பட்டி | மாலை 4 - 6 |
| 26 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சாயர்புரம் | மாலை 4 - 6 |
| 28 | அற்புத உபவாச ஜெபம் | பிரையண்ட்நகர், தூ-டி | காலை 10 - 3 |

## VBS 2012 **ஜெபியுங்கள்**

கடந்த ஆண்டு VBS **இயேசு போதுமே** என்ற தலைப்பில் 313 கிராமங்களில் நடத்தப்பட்டது. நாம் ஜெபத்துடன் திட்டமிட்டது 300 கிராமங்கள். அதன்மூலம் 15,000க்கும் மேற்பட்ட சிறுபிள்ளைகள் சந்திக்கப்பட்டார்கள். தேவன் 314 தன்னார்வ ஊழியர்களை எழுப்பித் தந்தார். நாம் ஜெபித்து தேவனிடத்தில் கேட்டது 350 தன்னார்வ ஊழியர்களை எழுப்பித்தாரும் என்று. அதன் பின்தொடர்பணியாக ஒருநாள் சிறுவர் முகாம்கள் பல கிராமங்களில் ஒவ்வொரு பணித்தளத்தின் சார்பாக நடத்தப்பட்டுள்ளது, நடத்தப்பட்டு வருகிறது. இவைகளுக்காக நீங்கள் கடந்த ஆண்டு ஜெபித்தீர்கள் கொடுத்தீர்கள் உங்கள் யாவருக்கும் நன்றி.

கடந்த ஆண்டு உங்களில் பலர் ஒரு கிராமத்தில் நடைபெற்ற VBS சை ரூபாய் 2500 கொடுத்து தாங்க முன்வந்தீர்கள். தொடர்ந்து உங்களுடைய உற்சாகமான காணிக்கை களையும் ஊக்கமான ஜெபங்களையும் எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆண்டு 325 கிராமங்களில் VBS நடத்த திட்டமிட்டு ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபிக்க உங்களை அன்புடன் ஞாபகப் படுத்துகிறோம்.

- ❏ தேவன் 400 தன்னார்வ ஊழியர்களை எழுப்பித்தர ஜெபியுங்கள்.
- ❏ அவர்களுக்கு தரமான பயிற்சி அளிக்கப்பட ஜெபியுங்கள்.
- ❏ இப்பயிற்சி மூலம் அவர்கள் ஆவியிலும், ஆத்துமாவிலும், வரங்களிலும், தாலந்துகளிலும் தேவனால் செழிப்படைய ஜெபியுங்கள்.
- ❏ தன்னார்வ ஊழியர்கள், நமது மிஷனரிகள் யாவரின் ஆரோக்கியத்திற்காக ஜெபியுங்கள்.
- ❏ தன்னார்வ ஊழியரை பயிற்றுவிக்கும் நமது மிஷனெரி சகோதர சகோதரிகளை கிருபை, ஞானம், வரங்களால் தேவன் நிரப்ப ஜெபியுங்கள்.
- ❏ VBS தன்னார்வ ஊழிய பயிற்சி நடைபெற உள்ள இடங்களின் பட்டியலைத் தருகிறோம். அவைகளுக்காக ஜெபியுங்கள்.

### VBS பயிற்சி நடைபெறும் இடங்கள்

தூத்துக்குடி, நெல்லை, மதுரை, விருதுநகர், திண்டுக்கல், திருச்சி, ஈரோடு, திருப்பூர், கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களில் 20 இடங்களில் நடைபெற உள்ளது ஜெபியுங்கள்!

**தூத்துக்குடி மாவட்டம்** 1. தூத்துக்குடி 2. சாயர்புரம் 3. ஸ்ரீவைகுண்டம்
**நெல்லை மாவட்டம்** 4. திருநெல்வேலி 5. அழகப்பபுரம் 6. ஆலங்குளம், 7. திருவேங்கடம் 8. அம்பாசமுத்திரம் 9. வடமலாபுரம்
**விருதுநகர் மாவட்டம்** 10. ஏழாயிரம்பண்ணை 11. சிவகாசி 12. சாத்தூர் 13. விருதுநகர் 14. இராஜபாளையம்
**திருச்சி மாவட்டம்** 15. மஞ்சம்பட்டி **ஈரோடு மாவட்டம்** 16. ஊத்துக்குளி
**திண்டுக்கல் மாவட்டம்** 17. விராலிபட்டி **திருப்பூர் மாவட்டம்** 18. தொட்டிப்பாளையம்
**மதுரை மாவட்டம்** 19. திரளி **குமரி மாவட்டம்** 20. தென்தாமரைக்குளம்

- VBSஇன் தேவை ரூ. 8,12500 (8 லட்சத்து 12 ஆயிரத்துஐநூறு) சந்திக்கப்பட
- VBS மூலம் 16500 பிள்ளைகள் சந்திக்கப்பட
- ஒரு VBSன் தேவை ரூ. 2500 வீதம் தாங்கும் நபர்களை தேவன் எழுப்பித்தர
- ஒரு பிள்ளைக்கு 6 நாட்கள் VBSமூலம் இயேசுவை அறிவிக்க தேவை ரூ. 50



கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கேதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள் (எபேசி. 4:29) நண்பர்களோடு அரட்டை அடிக்கிற, வம்பு பேசுகிற பழக்கம் இருக்குமாயின் எபே. 5:4, கொலோ 3:8ன் படி இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். எப்பொழுதும் கேட்கிறதற்கு தீவிரமாயும் பேசுவதற்கு பொறுமையாயும் இருங்கள் (யாக். 1:19). யாவரோடும் சமாதானமாகவும் அன்பாகவும் பேசுங்கள். வலிமை நிறைந்த குதிரை, சிறிய கடிவாளத்தினாலே அதன் முழு சரீரமும் திருப்பப்படுகிறது. பெரிய கப்பல், சிறிய சுக்கானாலே அதை நடத்துகிறவன் யோசிக்கும் இடத்திற்கு நேராக திருப்பப்படுகிறது. நாவு சிறிய அவயமாயிருந்தும், முழு சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தை கொளுத்திவிடுகிறது. எனவே அன்பானவர்களே, நாம் நம்முடைய வார்த்தைகளில் ஜாக்கிரதையாயிருந்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் மாறிவிடுவோம்.

### நடக்கையில் மாதிரி

உங்கள் நடக்கையிலும் மாதிரியாயிருங்கள். you should be and example in conduct. உலகப்பிரகாரமாக கல்வி நிறுவனங்களில் பயிற்சியை முடித்து வெளியேறும்பொழுது அங்கிருந்து ஒரு நடத்தை சான்றிதழ் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. His character and conduct is V.Good / Good / Satisfactory / Not Satisfactory (மிக நன்று / நன்று / திருப்திகரமானது / திருப்திகரமாக இல்லை) என அவரவர் நடத்தையை பொறுத்து மதிப்பீடு கொடுக்கப்படுகிறது. உன்னுடைய நடக்கை மிக நன்று அல்லது நேர்த்தியானது என்பதை விட இன்னும் மேன்மையாக முன்மாதிரியானதாக ஆக இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது.

ஒரு மனிதனுடைய நடத்தை (conduct) அவனுடைய ஒவ்வொரு நடக்கையை (action) பொறுத்தே அமைகிறது. எல்லாக் காரியங்களிலும் உண்மையோடும், ஒழுக்கத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பரி.பவுல் கூறுகிறார் : மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும் விசேஷமாக உங்களிடத்திலேயும் கபடமில்லாமல் உண்மையோடே நடந்தோம். (2கொரி. 1:12). மாம்ச இச்சையின் படியே நடந்து, மாமிசமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளையாய் நீ வாழ தேவன் விரும்பவில்லை. (எபேசி. 2:3) மனுஷனுடைய செய்கைக்குத் தக்கதை அவனுக்குச் சரிகட்டி, அவனவன் நடக்கைக்குத்தக்கதாக அவனவனுக்கு பலனளிக்கிறார் (யோபு 34:11). ஆகையால் உங்கள் பொல்லாத வழியை விட்டு திரும்பி உங்கள் நடக்கையை சீர்திருத்துங்கள். (எரே. 35:15)

ஆகையால் எனக்கு மிகவும் அன்பான வாலிப தம்பி, தங்காய், நீங்கள் உங்கள் வார்த்தையிலும், நடக்கைகள் எல்லாவற்றிலும் மாதிரியாக நடந்து பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளுங்கள். இன்னும் எவைகளில் மாதிரியாய் இருக்க வேண்டும் என்று தேவன் உன்னில் விரும்புகிறார் என அடுத்த இதழில் காண்போமா?

---

### துதியுங்கள்... ஜெபியுங்கள்...

நமது சாத்தூர் ரூரல் மிஷனெரி சகோ. ஸ்டீபன் மற்றும் அவரது மனைவியின் சித்தப்பா பாஸ்டர் சாம் அற்புதராஜ் அவர்களும் 5-1-2012 அன்று காலை சாத்தூர் கோவில்பட்டி நெடுஞ்சாலையில் இருசக்கர துரித வாகனத்தில் செல்லும்போது எதிர்பாராத விபத்துக்குள்ளானார்கள். சரியான சிகிச்சையை பெற்று தேவகிருபையால் சகோ. ஸ்டீபன் சுகமடைந்தார் துதியுங்கள். தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் பாஸ்டர் சாம் அற்புதராஜ் அவர்களுக்காய் ஜெபியுங்கள்.

# யாத்திராகமத்தில் தேவனுடைய நாமங்கள்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

1. தேவன் 1:7
2. தேவரீர் 4:10
3. எங்கள் தேவன் 5:8
4. என் தேவன் 15:2
5. உங்கள் தேவன் 8:25
6. என் தகப்பனுடைய தேவன் 15:2
7. சர்வ வல்லமையுள்ள தேவன் 6:3
8. உன் முற்பிதாக்களின் தேவன் 3:6
9. ஆபிரகாமின் தேவன் 3:6, 15, 4:5
10. ஈசாக்கின் தேவன் 3:6, 15, 4:5
11. யாக்கோபின் தேவன் 3:6, 15, 4:5
12. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவன் 3:16
13. இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமுள்ள தேவன் 34:6
14. அவர் எரிச்சலுள்ள தேவனே 34:14
15. கர்த்தருடைய தூதனானவர் 3:2
16. கர்த்தர் 3:4
17. கர்த்தர் என்பது அவருடைய நாமம் 15:3
18. கர்த்தராகிய நான் 4:11
19. நானே கர்த்தர் 7:18, 10:2, 12:12
20. நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் 15:26
21. உங்களை பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் 31:13
22. அவர் கர்த்தர், கர்த்தர் 34:6
23. எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தர் 18:10
24. தேவனாகிய கர்த்தர் 9:30
25. உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் 6:7
26. உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் 3:15
27. தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் 4:5
28. எபிரேயருடைய தேவனாகிய கர்த்தர் 3:18, 7:16
29. எங்கள் தேவனாகிய கர்த்தர் 3:18, 5:3, 10:25,26
30. உங்கள் தேவனாகிய கர்த்தர் 8:28, 10:16,17
31. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் 5:1
32. தங்கள் தேவனாகிய கர்த்தர் 10:7
33. எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் 20:2
34. உன் தேவனாகிய கர்த்தராகியிருக்கிற நான் 20:5
35. ஆண்டவரே 4:10
36. கர்த்தராகிய ஆண்டவர் 23:17
37. இருக்கிறவராக இருக்கிறேன் 3:14



சகோதரி. ஜீவரேகா என்ற சகோதரி சத்துணவு அமைப்பாளர் வேலை கிடைக்க... அவர்கள் கணவர் இரட்சிக்கப்பட... நம் ஊழிய சகோ. தனபாலனின் மகன் சுவீட்சன் மஞ்சள் காமாலையினால் பிடிபட்டுள்ளான். தேவன் அவனுக்கு சுகம் கொடுத்திட... சகோதரி. லில்லி வில்லியம் அவர்களின் மகளுக்கு கட்டிகொண்டிருக்கும் புதிய வீடு சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட... சகோ. சுந்தர் – எழிலி இவர்களின் மகன் 2 வயது சிறுவனுக்கு வெதர் வீக்கம் காணப்படுகிறது. இது குணமாக... சகோதரி. பரிமளம் அம்மாவிற்கு பென்சன் பணம் கிடைக்க.... சகோ. குமார் அவர்கள் வீடு சீக்கிரம் கட்டி முடிக்கப்பட.... சகோதரி. அம்பிகாபதிக்கு சீக்கிரம் திருமணம் நடக்க... தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. மீனாவின் தந்தைக்கு நரம்பு பாதிப்பிலிருந்து விடுதலை கிடைக்க...

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி** **பிப்ரவரி 27**

சகோ. இராஜகோபால் மகள் சுலோச்சனா, மகன் டேனியல் திருமணங்கள் நடைபெற... சகோ. டேவிட்டுக்கு ஆசிரியர் வேலை கிடைக்க... சகோ. குழந்தை அவர்கள் வீடு கட்டப்பட.... சகோ. டிண்டேல் 10வது வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற... சகோதரி ஜெயராணி அவர்கள் மருமகன் மனம் திருந்த.... சகோ. ஜேம்ஸ், பால்ராஜ், சகோதரி. நவமணி ஆகியோர் விசுவாசத்தில் வளர... சகோ. ஆரோக்கியசாமி, சகோ. சேகர், சகோ. சாந்தகுமார் இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... செவல்பட்டி ஊழியங்களுக்கு திறந்த வாசல் உண்டாக... திருப்பூர் சகோ. சாந்தகுமார் அவர்களுக்கு நல்லவேலை கிடைக்க... சகோதரி. ஜஸ்மீன், சகோதரர்கள் அலெக்சாண்டர், செல்வகுமார், விக்டர் தினகரன் ஆகியோருடைய திருமணம் நடைபெற...

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **பொங்கலூர்** **பிப்ரவரி 28**

இங்கு ஆலய கட்டுமானபணி சீக்கிரம் ஆரம்பிக்கப்பட.... இந்தப் பகுதியில் உள்ள துர் உபதேசக்காரர்களையும், அந்த ஊழியர்கள் மூலம் உள்ள பிரச்சனைகளையும் தேவன் நீக்கிப் போட... புதியதாய் ஆனந்ராஜ் என்பவர் குடும்பமாய் ஆராதனைக்கு வருகிறார்கள். இவர்கள் இன்னும் பலப்பட... தொட்டிப்பாளையத்தில் ஆராதனைக்கு வந்து கொண்டிருந்த நதியா என்ற சகோதரி தன் கணவர் நிமித்தம் ஆலய ஆராதனையில் பங்கு பெற முடியாமல் உள்ளார்கள். அவரை தேவன் சந்திக்க... சகோ. குணசேகரன் குடியிலிருந்து விடுதலை பெற....

பணித்தளம் : **வடமலாபுரம்** **பிப்ரவரி 29**

வேப்பங்குளத்தில் ஆலயம் கட்டி முடிக்கக் கிருபை செய்ததற்காக... சகோதரி. வேல்தாய் விதவைபணம் தொடர்ந்து கிடைக்க... சகோ. தர்மராஜ் குடிப்பழக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட... சகோ. அலெக்ஸ்க்கு காணப்படும் வயிற்றுவலி நீங்க... சகோ. செல்லத்துரை தொண்டை பகுதியில் ஆப்பரேஷன் செய்திருக்கிறார். அவர் குணம் அடைய....

பணித்தளம் : **ஊத்துக்குளி**

சகோதரி. ஜெயலட்சுமியின் கணவர் குடிப்பழக்கம் மாற... சகோ. கருப்பசாமி, சகோதரி. பாணியம்மாள் இவர்களுக்கு நல்ல சுகம் கிடைக்க... சகோதரி. மீனாட்சியின் மகளுக்கு திருமணம் நடைபெற... நல்ல மாப்பிள்ளை கிடைக்க.... இங்கு ஜெபம் நடத்துவதற்கு நல்ல வீடு கிடைக்க... விரைவில் சொந்தமாக ஒரு வீடு வாங்க....

தேவன் பாதுகாக்க... சகோ. பழனிவேல் மனம் திரும்ப இயேசுவை ஏற்றுக்கொள்ள... சகோ. பாண்டி தங்க வீடு இல்லை. கடன் அதிகம். இவருக்கு கடன் நீங்கி, நல்ல வீடு கட்ட.....

சகோதரர்கள் மழைசாமி, காளியப்பன், ஜெயக்கொடி, பாண்டி, பழனிவேல், மாயன் இவர்கள் மனம் திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள சகோதரர்கள் தேவராஜ், முருகேசன், ஜெயபால் இவர்கள் மனம்திரும்ப....

பணித்தளம் : **தொப்பம்பட்டி** **பிப்ரவரி 24**

சகோதரி. பஞ்சவர்ணத்தின் நிலப்பிரச்சனைகள் நீங்க... சகோ. கிருஷ்ணசாமிக்கு நல்ல சரீர சுகம் கிடைக்க... சகோதரி அழகம்மாள் இடுப்புப்பகுதியில் காணப்படும் பிரச்சனைகள் நீங்க... சகோதரி. ரோஸி 10வது வகுப்பு நன்றாக படிக்க... சகோதரி. முத்தம்மாள் முழுமனதோடு இயேசுவை ஏற்றுக்கொள்ள... ராமலெட்சுமி என்ற 5 வயது குழந்தைக்கு நல்ல மனவளர்ச்சியும் சரீர வளர்ச்சியும் உண்டாக... சுவிசேஷத்திற்கும், சிறுவர் கூடுகையை நடத்துவதற்கும் மிகுந்த இடையூறு பண்ணுகிற சகோ. மணியை கர்த்தர் சந்திக்க.... கௌசல்யா, அழகுசுந்தரி, அஞ்சலி, சுமித்ரா, சுகந்தி, அருண், சந்தோஷ், விஜய், பிரியதர்ஷினி, பாண்டிமீனா, மணிகண்டன் ஆகியோர் இரட்சிக்கப்பட...

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

சகோதரி. பாண்டியம்மாவுக்கு வயிற்றில் உள்ள பலவீனம் நீங்கி சுகம் உண்டாக... சகோதரி. பிச்சையம்மாள் கணவன் குடியிலிருந்து விடுபட... திரளியில் சமாதானம் உண்டாக.. கத்தி எடுக்கும் வாலிபர்கள் மனந்திரும்ப... சகோதரி. பஞ்சம்மாள் மருமகன் சிவக்குமார் விபத்துக்குள்ளாகி சுய நினைவின்றி 1½ மாதமாக இருக்கிறார். இவர் நன்றாக குணமடைய...

**நெல்லை மாவட்டம்**

பணித்தளம் : **அத்தியூத்து** **பிப்ரவரி 25**

6மாத குழந்தை ஆனந்தராஜுக்கு வெட்டு வியாதி சுகமாக... 3வயது சிறுமி பெபினாவுக்கு மூட்டு நீர் கட்டி மறைய... சிறுவன் முருகேஷ் தலை சுமக்க... சகோதரி. சுபாவுக்கு ஆசிரியர் பயிற்சி ரிசல்ட் சீக்கிரமாய் வர... சகோதரி. கற்பகவள்ளிக்கு வலிப்பு குணமாக... சகோதரி. கோகிலாவுக்கு சுகபிரசவத்தைக் கொடுக்க.... சகோதரி. மஞ்சுளா கணவனோடு இணைந்து வாழ... சகோதரி. ராசுக்குட்டிக்கு இருக்கும் சரீர ஊறல் மாற... +2 படிக்கும் ராசுக்குட்டி, இசக்கிமுத்து, டேனியல், ஜோனி, ஜெனிபர், பிரான்சிஸ் மற்றும் 10வது படிக்கும் கிறிஸ்டோபர், பிரேம்குமார், லூக்கா களஞ்சியம், ஜெயின்ஸ்துரை, வில்சன், ஜோஸ்பின் விக்டர் அதிக மதிப்பெண்கள் எடுக்க...

பணித்தளம் : **திருவேங்கடம்**

டிசம்பர் மாதம் நடைபெற்ற வாலிபர் முகாமில் கலந்து கொண்ட வாலிபர்கள் கிறிஸ்துவில் வளர, ஆசீர்வதிக்கப்பட... சின்னக்காளான் பட்டியில் ஆரம்பிக்கப்பட்ட ஆராதனையில் அநேகர் கலந்து கொள்ள... பின்மாற்றத்திலுள்ள கவிதா, மாலா இயேசுவில் நிலைத்திருக்க... சகோதரி. பிச்சை வீடு கட்டுமான பணியின் தேவை சந்திக்கப்பட... சகோ. ஜெயபாலுக்கு தேவன் கொடுத்த நல்ல வேலைக்காக... சகோதரி. செல்லத்தாய் கால்வலி மாற... சகோதரி. சுமதியின் கணவர் இரட்சிக்கப்பட...

பணித்தளம் : **அழகப்பபுரம்** **பிப்ரவரி 26**

சகோதரி. வளர்மதிக்கு வலதுகை புஜம் பகுதியில் வீக்கம், வேதனையும், மாற...



38. இருக்கிறேன் என்பவர் 3:14
39. பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர் 15:11
40. துதிகளில் பயப்படத்தக்கவர் 15:11
41. அற்புதங்களை செய்கிறவர் 15:11
42. யேகோவாநிசி 17:15
43. கர்த்தர் பெலனும் என் கீதமுமானவர் 15:2
44. கர்த்தர் எனக்கு இரட்சிப்புமானவர் 15:2
45. கர்த்தரே யுத்தத்தில் வல்லவர் 15:3
46. ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர் 34:7
47. அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர் 34:7
48. குற்றவாளியை குற்றமற்றவனாக விடாமல் பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் 34:7
49. கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது 34:14

**செய்திகள்**

- ஏ.டி.எம். கார்டு திருடு என்றால் சைபர்கிரைம் பிரிவில் தெரியப்படுத்த வேண்டும். அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு முன்பு உங்கள் சம்பந்தப்பட்ட வங்கிக்கு தெரியப்படுத்திவிட்டு, தெரியப்படுத்தவேண்டும். சைபர்கிரைம் போலீசாரின் மின் அஞ்சல் முகவரி இதோ info@cysi.in"
- 2011 அக்டோபர் 31 தேதி அன்று உலகின் 700வது கோடியாவது குழந்தை பிறந்திருக்கிறது. இந்தக் குழந்தை உத்திரபிரதேசத்தில் லக்னோ பட்டணத்திற்கு 20 கி.மீ தூரத்தில் அமைந்திருக்கும் ஒரு சமூக நலவாழ்வு மையத்தில் பிறந்தது. தற்போது உலகில் மக்கள் தொகை 700 கோடியாகும்.
- 1999 அக்டோபர் 12ல் உலகின் மக்கள் தொகை 600 கோடி. 1987 ஜுலை 11ல் உலகில் மக்கள் தொகை 500 கோடி. 1960ல் உலகில் மக்கள் தொகை 300 கோடி 1927ல் உலகில் மக்கள் தொகை 200 கோடி 1804ல் உலகில் மக்கள் தொகை 100 கோடி
- 2025ம் ஆண்டில் இந்தியா உலகிலேயே அதிக மக்கள் வசிக்கும் நாடாக கணிக்கப்படுகிறது. இன்னும் 13 ஆண்டில் முதலிடத்தில் இருக்கும் சீனாவை நமது இந்தியா முந்திவிடும் என்று கணிக்கிறார்கள்.
- **இராமேஸ்வரம் பாம்பன் பாலம்** – இந்த பாலம் 1811ம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் நீளம் 2.3 கி.மீ. இது 143 தூண்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது. இந்தப் பாலம் வழியாக முதலில் மீட்டர் கேஜ் ரயில்கள் சென்று வந்தன. 2007ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் நாள் இந்திய இரயில்வே அதை அகல ரயில் பாதையாக மாற்றியது. இந்தப் பாலத்தின் மத்திய பகுதி மேலே உயர்ந்து எழும்பி வளைந்து கப்பல்கள் செல்லும்போது வழி கொடுக்கும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள மியாமி பாலம்தான் உலக அளவில் உள்ள முதல் பெரிய பாலம். அதற்கு அடுத்த இடத்தில் இருப்பது இந்த பாம்பன் பாலம் தான்.
- பாதிக்கப்பட்ட குழந்தைகள் மீட்பிற்கு சைல்டு லைன் (Child Line) நிறுவனத்திற்கு இரவும் பகலும் தொடர்பு கொள்ள இலவச தொலைபேசி எண் 1098. இந்நிறுவனத்திற்கு 21 கிளைகள் உண்டு.

## *தேவனைத் துதிப்போம்! வாருங்கள்!*

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **பழைய அப்பனேரி** **பிப்ரவரி 1**

சகோதரி சுதா என்ற சகோதரியின் பிறந்த குழந்தைக்கு வந்த மரணப் படுக்கையை மாற்றிய கர்த்தரைத் துதிப்போம்! கூடாரத்தில் நடந்த சிறுவர் முகாமிற்கு அப்பனேரியிலிருந்து 70 பிள்ளைகள் கலந்து கொள்ள கர்த்தர் உதவி செய்ததற்காக... சகோதரி. விஜயா அவர்களின் பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிக்க...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

இங்கு ஜெபத்தின் மூலம் சில நபர்கள் குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றுள்ளனர். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

பணித்தளம் : **அய்யனேரி** **பிப்ரவரி 2**

இங்கு நடைபெற்ற கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனையில் பங்கு பெற்றவர்கள் இயேசுவுக்கு சொந்தமாய் மாற... சிப்பிப் பாறையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்களுக்குகாக.... சகோ. பவுல், சகோதரி. ஜெபக்கனி அவர்கள் பலவீனத்தோடு இருந்தார்கள். ஜெபித்தோம். கர்த்தர் பூரண சுகம் கொடுத்ததற்காக... சகோதரி. ஜெயமேரி திருமணத்திற்காக ஜெபித்தோம். கர்த்தர் திருமண காரியத்தை நடத்தித் தந்ததற்காக...

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

சகோதரி. கலாவதி புதிய ஆட்டோ வாங்க தேவன் கிருபை கொடுத்ததற்காக... சகோதரி. அன்னமேரிக்கு திருமண தடைகள் நீங்கி திருமணம் நடைபெற்றதற்காக...

பணித்தளம் : **சிவகாசி** **பிப்ரவரி 3**

முத்துசாமிபுரம் கிறிஸ்மஸ் சிறப்பு பொதுக்கூட்டம் கிறிஸ்தவர் இல்லா இக்கிராமத்தில் முதன்முதலில் நடத்தப்பட்டது. தேவன் தந்த இந்த திறந்த வாசலுக்காக...

பணித்தளம் : **ஜமீன்சல்வார்ப்பட்டி**

சகோ. அய்யனாருக்கு சீட்டு விளையாட்டு பழக்கத்திலிருந்து தேவன் விருதலை கொடுத்ததற்காக... சகோதரி. கல்பனாவிற்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கிடைத்ததற்காக.... சகோ. ராஜேந்திரன் தொடர்ந்து ஆலயம் வருவதற்கு தேவன் செய்த உதவிக்காக... சகோ. பால்ராஜ செய்கிற வியாபாரத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்தற்காக...

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – நவம்பர் மாதத்தில் நடைபெற்ற வாலிபர் முகாமில் அநேகர் கலந்து கொண்டதற்காக... வாலிபர் முகாமில் கலந்து கொண்ட மாணவியர் தேவனுடைய கூடாரத்தில் தினமும் காலையிலும், மாலையிலும் ஏராளம் வந்து ஜெபிக்கிறார்கள். அவர்களுக்காக...

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **பேட்மா நகரம்** **பிப்ரவரி 4**

சகோ. ஜேம்ஸ் பால் அவர்களுக்கு தேவன் நல்ல வேலை தந்ததற்காக... சகோதரி விஜயா மோன மணாளன் அவர்கள் சரீர பலவீனம் நீங்கி பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அதற்காக... சகோ. ஜாண் சொந்தவீடு கட்டி முடிக்க தேவன் உதவி செய்ததற்காக...

பணித்தளம் : **பண்ணைவிளை**

சாயர்புரம் ஏற்காடு தெருவில் புதிதாக வாலிப பெண்கள் ஜெபக்குழு



இங்கு ஜெபவீடு சீக்கிரத்தில் கட்டப்பட...

பணித்தளம் : **பண்ணைவிளை** **பிப்ரவரி 20**

சகோதரி. ஏஞ்சலை தேவன் ஆசீர்வதிக்க... சகோதரிகளை ராமலட்சுமி, மஞ்சு இவர்களுக்கு தேவன் சரீரத்தில் நல்ல சுகத்தைக் கட்டளையிட... சகோதரி. பிரிஸ்ஸியின் அம்மாவுக்கு நிரந்தரமான வேலை கிடைக்க... சகோதரி. தோமாவின் குடும்பத்தை தேவன் ஆறுதல் படுத்த... சகோதரி. பானுவின் படிப்பு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட... சகோதரி. சோனியாவின் அம்மா கர்த்தருக்குள் பலப்பட... சகோதரி. கிப்டாவின் வேலையைக் கர்த்தர் ஆசீர்வதிக்க... சகோதரி. தங்கக்குமாரி குடும்பத்தில் கடன் பிரச்சனை மாற...

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

இங்கு முதியோர் இல்லத்தில் இருக்கும் சகோ. லட்சுமி குடும்பத்தில் சமாதானம் உண்டாக... சகோ. ராஜம்மாள் அவர்களுக்கு உள்ள மனக்கோளாறு நீங்க... தெளிந்தபுத்தி கிடைக்க... மன அமைதி உண்டாக... சமத்துவ புரத்தில் சிறுவர் கூடுகைகளுக்கு இருக்கும் தடைகள் விலக... ஆலயத்திற்கு அநேகர் கலந்து கொள்ள்.... பின்மாற்றத்தில் இருக்கும் அநேகர் கடந்து வர... ஆலயத்திற்கு ஆண்கள் அநேகர் கடந்து வர...

பணித்தளம் : **புதுக்கோட்டை** **பிப்ரவரி 21**

சகோதரி. ஜெரூசா, பெரில், அமலா கர்த்தருக்குள் வளர... சகோதரி. ஏஞ்சல் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற.... சகோதரி. தீபிகா ஜெபத்திற்குக் கடந்து வர... சகோதரி. லாவண்யா குடும்பம் இணைய... சகோ. ஆவுடையப்பன் குடிப்பழக்கம் மாற... சகோதரிகள் மரியாள், கமலாவிற்கு ஏற்ற துணை கிடைக்க...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

இங்கு ஊழியம் செய்யும் சகோ. மோசஸ் சகோதரி. ரூபி அவர்களுடைய பிள்ளைகளுக்காக... 10வது படிக்கும் காளிதாஸ்க்காக... +2 படிக்கும் டேவிட்டுக்காக...

திருப்புளியங்குடி – திருப்புளியங்குடியில் ஆலயம் கட்ட தேவைகள் சந்திக்கப்பட... சகோதரிகள் தேவி, பிரபா, பிரியா, சர்மிளா இவர்கள் நன்றாக படிக்க.... தோழாப்பண்ணையில் ஆராதனை தொடங்கப்பட... சகோதரி. கிருபாவிற்கு ஏற்ற துணையை தேவன் தருவதற்காக....

பணித்தளம் : **தாதன்குளம்** **பிப்ரவரி 22**

சகோதரி. பேச்சியம்மாளுக்கு தொண்டையில் கட்டி உள்ளது. ஆப்ரேஷன் இல்லாதபடி கர்த்தர் குணமாக்க... கருங்குளத்தில் வாலிபர் கூடுகை நடத்த இருக்கும் தடை நீங்க... சகோதரி. கவிதாவிற்கு சுகப்பிரசவம் நடக்க... சகோ. சுரேஷ் விபத்தினால் ஏற்பட்ட காயம் குணமாக... +2 படிக்கும் சகோதரி. மகேஷ்வரி நன்றாக படிக்க... சகோதரி. சகிலா, சகோ. ஜெபஸ்டின் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனை நீங்க... சகோதரி. வசந்த ஆண்டவருக்குள் பலப்பட....

பணித்தளம் : **திருக்களூர்**

சகோதரிகள் பேச்சி, சாந்தி இவர்கள் இரட்சிக்கப்பட..... சகோ. ராமன் சந்திக்கப்பட... சகோதரர்கள் ரவி, மணி, சங்கர், சுடலை, அஜித், செல்வகுமார், பால்பாண்டி இரட்சிக்கப்பட... பால்குளம் கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க இருக்கும் தடைகள் நீங்க... சகோதரி சத்யா நர்சிங் படிக்க...

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **விராலிப்பட்டி** **பிப்ரவரி 23**

ஆலய வளாகம் சுற்றிலும் விஷ பூச்சி அதிகமாக இருக்கிறது. விஷ பூச்சியிலிருந்து

இருக்கும் தடைகள் மாற...

**சிவகாசி** – ராஜபாளையம் சகோ. சாமுவேல், மிஷனெரியைத் தாங்குபவர், விபத்தினால் காலில் பலத்த அடி ஏற்பட்டுள்ளது. கர்த்தர் பூரண சுகம் கொடுக்க.. சகோதரிகள் பிளாரன்ஸ், உமா ஆகியோருக்கு கர்த்தர் அற்புதம் செய்ய... சகோ. பாலகிருஷ்ணனுக்கு வேலைக்கு வழி திறக்கப்பட.... விசா கிடைக்க... சிறுவர் கூடுகைகள் ஆசீர்வதிக்கப்பட... மிஷனெரி குடும்பத்திற்கு நல்ல வீடு கிடைக்க.. சகோதரி சுசீலா அவர்களுடைய இருதய பலவீனம் மாற... சகோ. கருப்பசாமி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... வீடு வாங்க... சகோதரி. லீதியாள் திருமண தடை நீங்க... சகோதரி. ஸ்டெல்லா அவர்களின் திருமண தடை நீங்க...

பணித்தளம் : **ஜமீன் சல்வார்பட்டி** **பிப்ரவரி 16**

சகோ. தர்மலிங்கம் வீட்டு வேலைகள் முடிந்து பிரதிஷ்டை செய்யப்பட... சகோ. ஈஸ்வரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட... சிறுமிகள் மகேஷ், பிரியங்கா இவருவரும் தொடர்ந்து ஆலயத்திற்கு வர சகோ. கலைச்செல்வன் குடிப்பழக்கம் மாறி குடும்பமாய் ஆலயத்திற்குக் கடந்து வர....

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – சிறுவர்கள் மத்தியில் ஜெபக்குழு ஆரம்பிக்க... பெண்கள் மத்தியில் ஜெபக்குழு உருவாக... திறப்பின் வாயில் ஜெபத்தில் அநேகர் கலந்து கொண்டு ஜெபிக்க... தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற சிறுவர், வாலிபர் முகாம்களில் கலந்து கொண்ட பிள்ளைகள் அவர்கள் அடுத்த தீர்மானத்தில் நிலைத்திருக்க, சாட்சியாக ஜீவிக்க... பாவ போராட்டத்தில் விடுதலை பெற்ற பிள்ளைகள் பாதுகாக்கப்பட... தேவனுடைய கூடாரத்தில் ஊழியம் செய்கிற ஊழியர்கள் மீதும் இங்கு இருக்கிற ஒவ்வொரு பொருட்கள் மீது தேவகரம் இருந்து பாதுகாக்கப்பட.... ஆர்.சி. கிறிஸ்தவர்கள் மத்தியில் சுவிசேஷ தடை நீங்க....

பணித்தளம் : **என். திருவேங்கடபுரம்** **பிப்ரவரி 17**

இறந்து போன வேதமுத்து ராணுவ பணியாளர் தற்போது அவரது மனைவிக்கு சேர வேண்டிய பண உதவி கிடைக்க... சகோதரி. குருவம்மாளுக்கு சகோதரர் மூவருக்கும் குடும்பத்தில் சமாதானம் பெருகவும், சகோ. சுந்தரராஜ்க்கு ஏற்ற துணையை தேவன் ஏற்படுத்தி தர... சகோதரி. சங்கீதாவின் இருதயம் நல்ல முறையில் செயல்பட... சகோ. ஜாண் இளங்கோ குடும்பத்தினர் இரட்சிக்கப்பட... சகோதரி. ஜெனிபர்க்கு சுகப்பிரசவம் நடைபெற... சகோ. டேனியல் சகோதரி மரியாள் இவர்களுக்கு வரவேண்டிய பணம் சீக்கிரம் கிடைக்க... சகோ. பவுல் பொன்னுச்சாமிக்கு அறுவை சிகிச்சை நடந்துள்ளது. பூரண சுகமடைய. அவர் கடை வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **பேட்மாநகரம்** **பிப்ரவரி 18**

சகோ. ஜோசப் அவர்களுக்கு பாக்குபோடுவதிலிருந்தும் குடிப்பழக்கத்திலிருந்தும் தேவன் விடுதலை கொடுக்க... சகோதரி. வசந்திக்கு நல்ல வேலை கிடைக்க... சகோ. ஹெரால்டு விக்டர் அவர்களுக்கு ஆஸத்துமா நோயிலிருந்து விடுதலை தர... சகோதரி. காளி அவர்களுக்கு வயிற்றில் காணப்படுகிற கட்டி எந்த ஆப்ரேஷனும் இல்லாமல் குணமாக, சகோ. ராஜ் அவர்களுக்குக் காணப்படும் குடல் இரக்கம் நீங்க... சகோ. காசிராஜன் அவர்களுடைய வீடு கட்டப்பட... அதன் தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. லட்சுமி குடும்பத்தில் காணப்படுகிற கடன்பிரச்சனை மாற... சகோதரி சுப்பு குடும்பத்தில் காணப்படும் கடன் மாற... சகோதரி. கலாவுக்கு வீடு கட்ட பேரூரில் நல்ல இடம் கிடைக்க...



நடைபெறுவதற்காக... சகோதரி. கிளாரியா சகோதரியின் குடும்பத்தைத் தேவன் ஜெபிக்க எழுப்பிக் கொடுத்ததற்காக... சகோதரி. தவமணியின் தாயாருக்கு சரீரத்தில் புது பெலன் கிடைத்ததற்காக....

பணித்தளம் : **புதுக்கோட்டை**

குடும்பத்திலிருந்து பிரிந்த குமார் என்ற சகோதரன் குடும்பத்தோடு இணைந்ததற்காக... டிசம்பர் மாதம் தூத்துக்குடி ரூபவதி பேலஸ் விக்டோரியஸ் Victorious முகாமில் 1100க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

### திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **ஊத்துக்குளி** **பிப்ரவரி 5**

சகோதரி. செல்லம்மாள், சகோ. பெருமாள்சாமி வண்டியில் செல்லும்போது கீழே விழுந்து அடிபட்டது. ஜெபித்தோம். கர்த்தர் பூரண சுகம் கொடுத்ததற்காக... சகோதரர். முகைதீனுக்கு உடல்நலக் குறைவிலிருந்து பூரண சுகம் கொடுத்ததற்காக...

### திண்டுக்கல் மாவட்டம்

பணித்தளம் : **தொப்பம்பட்டி**

சகோ. ரவிச்சந்திரன் வேலை பார்க்கும்போது ஆயில் மோட்டாரின் புகை கண்ணில் பட்டு கண் மங்கலாகி விட்டது. ஜெபித்தபின் எனது கண் சரியாகி விட்டது என்று கூறினார். அதற்காக தேவனைத் துதிப்போம்... சகோ. அரவிந்த், மாணவி அஜித்தா ஆகியோருக்குக் காணப்பட்ட சுகவீனம் நீங்கியதற்காக...

### நெல்லை மாவட்டம்

பணித்தளம் : **வடமலாபுரம்** **பிப்ரவரி 6**

வேப்பங்குளத்தில் ஆலயம் கட்ட கிருபை செய்ததற்காக... தேவன் நல்ல மழையைக் கட்டளையிட்டதற்காக... சகோதரி. சந்திரலேகா கால் பிரச்சனையிலிருந்து நன்றாக நடக்க கிருபை செய்ததற்காக... ஆலய பிரதிஷ்டை டிசம்பர் 30ல் நடைபெற்ற தேவன் கிருபை செய்ததற்காக...

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி**

சகோதரி. ராஜாத்தி அவர்கள் வீட்டிற்கு மின்சாரவசதி தடைப்பட்டுக்கொண்டிருந்தது. ஆராதனைக்கு வந்தார்கள் ஜெபித்தோம். தடைகள் மாறி மின்சார வசதி கிடைத்ததற்காக... 2011ம் ஆண்டு முழுவதும் கர்த்தர் எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காத்ததற்காக...

### நெல்லை மாவட்டம்

பணித்தளம் : **திருவேங்கடம்** **பிப்ரவரி 7**

இங்கு 12 மாதங்களும் தடையின்றி அற்புதத்தின் மாலை ஜெபம் நடத்த தேவன் கிருபை செய்ததற்காக... சின்ன காளான்பட்டியில் ஆரம்பிக்கப்பட்ட ஆராதனைக்காக... சகோ. ஜெயபாலுக்கு தேவன் கொடுத்த நல்ல வேலைக்காக...

பணித்தளம் : **அழகப்பபுரம்**

8வது வருட ஆலய பிரதிஷ்டைய ஜெபமும் நவம்பர் 28,29, இரு நாட்கள் கன்வென்ஷனும் ஞானஸ்நான ஆராதனையிலும் நடைபெற தேவன் உதவி செய்ததற்காக... 10-12-11ல் குடும்ப மன மகிழ்ச்சி முகாம் இனிதே நடைபெற உதவின தேவனுக்கு ஸ்தோத்திரம்.... சகோ. ராஜேஷ்க்கு திருமண காரியத்தை கர்த்தர் வாய்க்கச்

செய்ததற்காக... சகோதரி. இராஜாத்தியம்மா, மருமகளுக்கு ஆண் குழந்தை பிறந்ததற்காக...

பணித்தளம் : **விராலிப்பட்டி** **பிப்ரவரி 8**

கடந்த 7-12-2011 அன்று இரவு நேரம் நானும் என் மனைவியும் (மிஷனெரி. சகோ. தேவதாஸ் அவரது மனைவியும்) வெளிச்சம் இல்லா நேரம் ஆலய வாசலின் கீழ்ப்படியில் இரவு 8 மணிக்கு பேசிக்கொண்டு இருக்கும் போது, எங்கள் கால் பாதம் பக்கம் ஒரு கருநாகம் படம் எடுத்து இரண்டு தடவை எழும்பி நின்றது. நாங்கள் கால் அசைக்காமல் இருந்து திகைத்துப் போனோம். ஆனால் கர்த்தர் கிருபையாய் எங்களுக்கு ஒரு சேதமும் வராமல் காத்தார். அதற்காக தேவனைத் துதிப்போம். சகோதரி. மகாலட்சுமி அதிக வருடமாய் திருமணம் நடக்க தடையாக இருந்தது. தடைகளை நீக்கி திருமணம் நடக்க கிருபை செய்ததற்காக... சகோதரி. மாரீஸ்வரி உடம்பு முழுவதும் கொடிய புண்ணாக இருந்தது. கர்த்தர் ஜெபம் கேட்டு நல்ல பூரண சுகம் கொடுத்ததற்காக... கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சுமார் 350க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டதற்காக....

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி** **பிப்ரவரி 9**

சகோ. சேசு அவர்கள் வீடு கட்டப்பட்டதற்காக... சகோதரி. செல்வ சுவிதாவிற்கு கொடுத்துள்ள பெண் குழந்தைக்காக... சகோதரி. ரேகாவிற்கு கொடுத்துள்ள பெண் குழந்தைக்காக... சகோதரி வனஜா இவர்களுக்கு 17 ஆண்டுகளுக்கு பின் கர்ப்பம் அடைய செய்ததற்காக... சகோதரி. பாத்திமா அவர்கள் காலில் இருந்த கட்டி ஜெபத்தின் மூலம் கரைத்த தேவாதி தேவனைத் துதிப்போம். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு ஆலய ஆராதனைகளை தேவன் நடத்தி தந்ததற்காக...

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **பொங்கலூர்**

இந்திரா காலனியில் சகோ. ஆனந்தராஜ் என்பவர் 7 வருடமாய் பின் வாங்கி போயிருந்தார். இப்போது மீண்டும் நம்மோடு சேர்ந்தும் ஆராதிக்க வருகிறதற்காக... தொட்டிபாளையம் கிராமத்தில் வார்டு கவுன்சிலருக்கு காலில் பெரிய புண் நிமித்தம் வலியும், வீக்கமும் சேர்ந்து கஷ்டப்பட்ட அவருக்கு விசுவாசி ஒருவர் ஜெபித்து எண்ணெய் பூசினபோது உடன்தானே வலி நீங்கி வீக்கம் தீர்ந்து நடக்க ஆரம்பித்து உள்ளார். சுகத்தைப் பெற்றுக்கொண்ட அவர் இயேசுதான் மெய்யான தெய்வம் என்று அறிக்கையிட்டதற்காக... சகோதரி உமாவின் பாட்டி கீழே விழுந்து கால் முறிவு ஏற்பட்டதில் கர்த்தர் பூரண சுகம் கொடுத்ததற்காக...

## *தேவனை நோக்கி முழங்காலில்*

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **பழைய அப்பனேரி** **பிப்ரவரி 10**

சகோதரி. எப்சிபா ஒவ்வொரு வாரமும் ஆலயத்திற்கு கடந்து வர.... சகோதரி ராதா, சகோ. சங்கர் அப்பன் வேலையில் இருக்கிற தடைகள் மாற... சகோ. சீனிவாசன், சகோதரி. செல்வராகவி இவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட... சகோ. சுப்புராஜ்க்கு காலில் அடிபட்ட இடத்தில் உள்ள வலி மாற... சகோதரி. முத்துலட்சுமியின் பலவீனம் நீங்க... சகோதரி. வரலட்சுமி இரட்சிக்கப்பட... சகோ. ஞானகுருசாமி குடிப்பழக்கம் மாற... சகோதரி. அமுதா



ஆலயத்திற்கு கடந்து வர... சகோ. சுரேஷ் இரட்சிக்கப்பட...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

சகோதரி. ஜமுனா என்ற சகோதரியின் கணவருக்கு வெட்டு வியாதியிலிருந்து விடுதலை கிடைக்க... சகோதரி. முருகலட்சுமிக்கு இருப்பதான சுகவீனம் நீங்க... சகோ. முத்துகுமாருக்கு காலில் உள்ள கட்டி நீங்க.... முத்தாண்டியா புரத்தில் ஒரு சகோதரி நிலம் வாங்கியுள்ளார். நிலம் கொடுத்தவர் மேலும் மேலும் பணம் கேட்டு தொந்தரவு செய்கிறார். அவர் மனம் மாற ஜெபியுங்கள்.

பணித்தளம் : **அய்யனேரி** **பிப்ரவரி 11**

சகோதரி. இராஜம்மாள் மகன் திருமணமாகி தற்போது பிரிந்திருக்கிறார்கள். அவர்கள் இணைந்து வாழ... சகோதரி. சுப்புத்தாயின் மகன் வெளிநாட்டில் இருக்கிறார். மகனிடமிருந்து உதவிகள் கிடைக்க... மகன், மருமகள், பேரன் இரட்சிக்கப்பட... சிறுவர் கூடுகைக்கு அநேகர் கலந்து கொள்ள.... அய்யநேரியில் கட்டிட பணி ஆரம்பிக்க அனுமதி கிடைக்க... சகோதரி. தனம்மாள் குடும்பத்தில் உள்ள பிரச்சனை மாற.... சகோ. வெங்கடேஷ்க்கு குடிப்பழக்கம் மாற... சகோதரி சுப்புலட்சுமி வீட்டு கடன் பிரச்சனை மாற... மகன் மகேஸ்வரனுக்கும் வனிதாவுக்கும் தேவன் கர்ப்பத்தின் கனிகளைக் கொடுக்க...

பணித்தளம் : **சென்னல்குளம்** **பிப்ரவரி 12**

சகோ. வைரமுத்து நன்கு வேலைக்குச் செல்ல... சகோ. ராஜ், சகோதரி டயானா, +2வில் நல்ல மதிப்பெண்கள் பெற.... சகோதரி. பாப்பா, சகோ. சுப்பையாவுக்கு சரீரத்தில் நல்ல சுகம் கிடைக்க... புதூரில் வீட்டு ஜெபம் நடத்த நல்ல இடம் கிடைக்க... கரிசன்குளத்தில் வீட்டு ஜெபம் நடத்த நல்ல இடம் கிடைக்க... சகோ. சண்முகம் மதுபான பழக்கம் மாற... சகோ. முத்துராஜா கல்லூரியில் நல்ல மதிப்பெண் கிடைக்க... சகோதரிகள் சோனியா, ஆனந்தி, சகோ. இளங்கோ ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்ள...

பணித்தளம் : **முக்கூட்டுமலை** **பிப்ரவரி 13**

சகோதரி. செல்வி. சகோ. கந்தசாமி இரட்சிக்கப்பட 8 வயது சிறுவன் மணிமாறன் இருதயத்தில் உள்ள ஓட்டை சுகமாக... சகோதரி. ராணிக்கு உதிரப்போக்கு நீங்க... சகோ. முத்து மாரிமுத்து குடிப்பழக்கத்தில் இருந்து விடுபட... சகோதரிகள் அலங்கார அம்மாள், சோலைகிளி, சகோ. சோலைராஜ் குடும்பம் இரட்சிக்கப்பட..... சகோதரி. பேச்சியம்மாளுக்கு கண்பார்வை கிடைக்க... சகோதரி. பாக்கியம் அம்மாளுக்கு வீடு கட்ட பண உதவி கிடைக்க.. சகோ. ரகு நன்றாக படிக்க...

பணித்தளம் : **மைப்பாறை** **பிப்ரவரி 14**

இங்கு ஆலயத்திற்கு சீக்கிரம் சன்னல்களுக்கு கதவுகள் போடப்பட... ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க... சகோதரி. ஞானசவுந்தரிக்கு சுகர் வியாதியினால் பாதிக்கப்பட்டு காலில் புண் உள்ளது. இது சீக்கிரத்தில் குணமாக... சகோ. இராஜேந்திர பிரசாத் வெளிநாட்டில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வேலை கிடைக்க... அவருடைய மனைவியின் அக்காள் மகள் புதிதாக திருமணமாகி இருசக்கர வாகனத்தில் வந்தபோது லாரி அடித்து மாப்பிள்ளை உடனே இறந்துவிட்டார். அந்த சகோதரியின் ஆறுதலுக்காக.. சகோதரி. அபிக்கு இழுப்பு வியாதி சுகமாக...

பணித்தளம் : **பண்டுதன்பட்டி** **பிப்ரவரி 15**

சகோதரி கோவிந்தமாளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோ. கிறிஸ்டியான் நீர்கடுப்பு நோயிலிருந்து சுகம் கிடைக்க.. சகோ. துரைராஜ் சரீர பலவீனத்திலிருந்து சுகம் கிடைக்க... சகோ. பாரதி ஞானஸ்நானம் பெற... சகோதரி எஸ்தருக்கு ஆலயத்திற்கு வர